ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ   அதிவிசேஷமானது

අංක 1904/30 - 2015 මාර්තු 03 වැනි අඟහරුවාදා - 2015.03.03
**1904/30 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளை*

*2014 ஆம் ஆண்டின் 203 ஆம் இலக்கக் கட்டளை*

எனது குறிப்பு இல. : 4-3/7/2014/எச்டபிள்யூ/312.
பிர. செ.குறிப்பு இல. : வே/பி.செ/சு./வீ.அ.அ./164.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எம். கே. ஏ. டீ. எஸ் குணவர்தன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2015.02.24.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், தீவகம் தெற்கு - வேலணை.

2. **காணியின் விபரம்** : வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில், தீவகம் தெற்கு - வேலணை பிரதேச செயலாளர் பிரிவில், சரவணை மேற்கு, ஜே/21 கிராம சேவகர் பிரிவில் உள்ள, சரவணை கிராமத்தில் அமைந்துள்ளதும், சிரேஷ்ட நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட 2014.11.29 ஆந் திகதிய முதற் சுவட்டு இல. யா/விஎஸ்என்/2014/215 இல் துண்டு 'ஏ' யில் விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0104 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய காணித் துண்டின் எல்லைகள் பின்வருமாறு :

01. **துண்டு ஏ - கட்டு நொச்சிக்குழி மற்றும் நொச்சிக்குழி - விஸ்தீரணம் : 0.0104 ஹெக்டயார்**
வடக்கு : வீதி (வீ.அ.அ.) ; கிழக்கு : வீதி (வீ.அ.அ.) மற்றும் கட்டு நொச்சிக்குழி மற்றும் உரிமை கோருபவர் தெரியாத நொச்சிக்குழி ; தெற்கு : கட்டு நொச்சிக்குழி மற்றும் நொச்சிக்குழி, ஆறுமுகம் பஞ்சாட்சரம் ; மேற்கு : கட்டு நொச்சிக்குழி, நொச்சிக்குழி, ஆறுமுகம் பஞ்சாட்சரம் மற்றும் பாதை.

*03 -524*